Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 25 [07-04-1993] புதன்கிழமை ஓசை 48

## உலக சுகாதார நிறுவனத்தால் சுகாதார தினம் பிரகடனம்

உலக சுகாதார நிறுவனத்தால் ஒவ்வொரு வருடமும் சித்திரை 7ஆம் திகதி உலக சுகாதார தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் ஒரு முக்கிய சுகாதார பிரச்சினைபற்றி கூடிய கவனம் செலுத்துமாறு உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. இந்த வருடத்திற்கான உலக சுகாதார நிறுவனத்தின் வேண்டுகோள் பின்வருமாறு அமைகிறது. ''மனித உயிர் பாதுகாக்கப்படல் வேண்டும்'' (HANDLE LIFE WITH CARE) ''கவலையீனத்தையும் காயங்கள் ஏற்படுவதையும் தடுக்கவும்'' (PREVENT ViOLENCE AND NEGLIGENCE) உலகில் ஒவ்வொரு வருடமும் 35 லட்சம் மக்கள் பல காரணிகளினால் காயங்கள் ஏற்படுவதனால் இறக்கின்றார்கள். இதில், குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் கூடுதலாக இருக்கின்றார்கள். [4 ஆம் பக்கம் பார்க்க]

# மன்னார் பாலத்தில் புலிகளின் துணிகர அதிரடித் தாக்குதல்

## அதிகாரி உட்பட 3 படையினர் பலி ஜீப் வண்டி கடலில் பாய்ந்தது

[மன்னார்]

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்கும் கோட்டை இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள பாலத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரமான அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்கள் பயணம் செய்த ஜீப் கடலினுள் தலைகுப்புற கவிழ்ந்தது. அவர்களிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 10-38 மணியளவில் இத் துணிகரத் தாக்குதல் இடம்பெற்றது. மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்கும் கோட்டை இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள கறிச்சட்டிப் பால காவலரணுக்கும் பெரியபாலத்திற்கும் இடையிலேயே இத் தாக்குதல் இடம் பெற்றது.

மின்னல் வேகத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதல் ஒரு நிமிட நேரம் மட்டுமே இடம்பெற்றது. இத் தாக்குதலின்போது ஸ்தலத்திலேயே ஓர் அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இராணுவத்தினர் பயணம் செய்த ஜீப்வண்டி தலை குப்புற கடலினுள் வீழ்ந்தது. பின்னர் இவ் ஜீப்வண்டி புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் சமிக்ஞைப் பிரிவைச் சேர்ந்தவர்களான லெப்டினன்ட் கே. பி. சமரசிங்க, கோப்ரல் சுமணபால, கருணரட்ன என்போரே என சிறிலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்தது.

### புலிகளின் அதிரடி இராணுவ தரப்பு அதிர்ச்சி

விடுதலைப்புலிகள் மன்னார் பாலத்தில் மேற்கொண்ட துணிகர தாக்குதல் இராணுவ வட்டாரங்களில்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராணுவத்தினரின் இரவு பகல் கண்காணிப்பிலும் பூரண கட்டுப்பாட்டிலும் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | | | |
|---|---|---|---|
| ★ ரி 56-1 துப்பாக்கிகள் | — 02 | ★ ரி 56 ரவைக்கூடுகள் | — 02 |
| ★ ஜி3 ஏ3 ரக துப்பாக்கி | — 01 | ★ ஜி3 ஏ3 ரவைக்கூடு | — 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — 60 | ★ வோக்கி | — 01 |
| ★ நேட்டோ ரவைகள் | — 19 | ★ சப்பாத்து [சோடி] | — 01 |

### தாண்டான்மலைப் பகுதியில்

### கிளாலி–பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

### 'அவ்ரோ' நோட்டம்

(குருநகர்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான 'அவ்ரோ' விமானமொன்று நேற்று பிற்பகல் 3-00 மணியளவில் யாழ். நகரின் மேலாக சுற்றி வட்டமிட்டது.

பலாலியில் இருந்து வந்த மேற்படி விமானம் நகரை வட்டமிட்டு கிளாலிப்பக்கமாக சென்றதைக் காண முடிந்தது. (21). (90)

### மாணவ முத்திரைக்கு பொருள்கள் விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் கடந்த 1992ஆம் ஆண்டு அக்டோபர். நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைக்கான பொருள்கள் கடந்ததிங்கட்கிழமை முதல் 12ஆம் திகதி திங்கட் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

### யாழ்-வன்னி தொடர்பு சேவை 10-ம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நெருக்கடிகால யாழ்-வன்னி தொடர்பு சேவை எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முதல் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ளது என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதுபற்றிய முழு விபரங்களும் எதிர்வரும் 9ஆம் திகதி பத்திரிகைகளில் வெளிவரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். வங்கி கிளைகளில் மீண்டும் பணத்தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ளவங்கிகளில் மீண்டும் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழ்ப் புத்தாண்டு காலத்தில் தமது வைப்பிலுள்ள பணத்தைப் பெறச்செல்லும் வாடிக்கையாளர்கள் பலத்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். வங்கி மீளளிப்புச் செய்யும் பணத்தொகையை கருமபீடத்தில் அறிந்த பின்பே காசோலையை எழுத வேண்டிய நிலையில் உள்ளதாக வாடிக்கையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

இதேவேளை தற்போது யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி கிளையிலிருந்து ரூபா 1500 மட்டுமே பெறக் கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

### க. பொ. த. (உ/த) பரீட்சை மொத்தபுள்ளி வெளியாகின

#### வர்த்தக பிரிவில் யாழ். மாணவி முதலிடம்

(கொழும்பு)

1992 ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் இன்று கொழும்பில் வெளியிடப்படுகின்றது.

இப் பரீட்சை எழுதிய ஒரு லட்சத்து 55 ஆயிரத்திற்கும் அதிகமான பரீட்சார்த்திகளில் 55 ஆயிரத்து 126 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதாகபரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல நேற்று தெரிவித்தார்.

பரீட்சார்த்திகள்பெற்ற ஆகக்கூடுதலான புள்ளி அடிப்படையில், பொறியியல் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர் ரி. தயாபரன் 362 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைபெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மாணவி டானியல் திரேசா 340 புள்ளிகளைப்பெற்று அகிலஇலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

மருத்துவ -உயிரியல் பிரிவில் ஆகக்கூடுதலான புள்ளியான 342 புள்ளிகளை கொழும்பு றோயல் கல்லூரி மாணவர் பெற்றார்.

# இந்து சமுத்திரத்தில் ஐ. நாவின்

நேற்று முன்தினம் இரவு 10-38 மணியளவில் இத் துணிகரத் தாக்குதல் இடம்பெற்றது. மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்கும் கோட்டை இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள கறிச்சட்டிப் பால காவலரணுக்கும் பெரியபாலத்திற்கும் இடையிலேயே இத் தாக்குதல் இடம் பெற்றது.

மின்னல் வேகத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதல் ஒரு நிமிட நேரம் மட்டுமே இடம்பெற்றது. இத் தாக்குதலின்போது ஸ்தலத்திலேயே ஓர் அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இராணுவத்தினர் பயணம் செய்த ஜீப்வண்டி தலை குப்புற கடலினுள் வீழ்ந்தது.

பின்னர் இவ் ஜீப்வண்டி புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் சமிக்ஞைப் பிரிவைச் சேர்ந்தவர்களான லெப்டினன்ட் கே. பி. சமரசிங்க, கோப்ரல் சுமணபால, கருணரட்ன என்போரே என சிறிலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்தது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | | | |
|---|---|---|---|
| ★ ரி 56-1 துப்பாக்கிகள் | — 02 | ★ ரி 56 ரவைக்கூடுகள் | — 02 |
| ★ ஜி3 ஏ3 ரக துப்பாக்கி | — 01 | ★ ஜி3 ஏ3 ரவைக்கூடு | — 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — 60 | ★ வோக்கி | — 01 |
| ★ நேட்டோ ரவைகள் | — 19 | ★ சப்பாத்து [சோடி] | — 01 |

## புலிகளின் அதிரடி இராணுவ தரப்பு அதிர்ச்சி

விடுதலைப்புலிகள் மன்னார் பாலத்தில் மேற்கொண்ட துணிகர தாக்குதல் இராணுவ வட்டாரங்களில்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராணுவத்தினரின் இரவு பகல் கண்காணிப்பிலும் பூரண கட்டுப்பாட்டிலும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பலாலியில் இருந்து வந்த மேற்படி விமானம் நகரை வட்டமிட்டு கிளாலிப்பக்கமாக சென்றதைக் காண முடிந்தது.

(21). (90)

## மாணவ முத்திரைக்கு பொருள்கள் விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் கடந்த 1992ஆம் ஆண்டு அக்டோபர். நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைக்கான பொருள்கள் கடந்ததிங்கட்கிழமை முதல் 12ஆம் திகதி திங்கட்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் இன்று கொழும்பில் வெளியிடப்படுகின்றது.

இப் பரீட்சை எழுதிய ஒரு லட்சத்து 55 ஆயிரத்திற்கும் அதிகமான பரீட்சார்த்திகளில் 55 ஆயிரத்து 126 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதாகபரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெத முல்ல நேற்று தெரிவித்தார்.

பரீட்சார்த்திகள்பெற்ற ஆக பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர் ரி. தயாபரன் 362 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைபெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மாணவி டானியல் திரேசா 340 புள்ளிகளைப்பெற்று அகிலஇலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

மருத்துவ -உயிரியல் பிரிவில் ஆகக்கூடுதலான புள்ளியான 342 புள்ளிகளை கொழும்பு றோயல் கல்லூரி மாணவர் பெற்றார்.

### தாண்டடான்மலைப் பகுதியில்

# புலிகளின் தாக்குதலுக்கு 2 இராணுவத்தினர் பலி

(மட்டக்களப்பு)

கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டம் தாண்டான் மலை இராணுவ முகாமிலிருந்து மாலை 3.10 மணியளவில் றெட்பானா வீட்டுத்திட்டத்தை நோக்கிவந்த இரண்டு இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் அவ்விரு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஜே.ஆர். ரகக்கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு வரும் இராணுவத்தினர் அங்கு வசிக்கும் மக்களை துன்புறுத்துவதுடன் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னாருக்கு படகில் வந்த ஒன்பது புளொட் கைது

தென்னிந்தியாவிலிருந்து மன்னாருக்கு படகில் வந்த ஒரு பெண் உட்பட ஒன்பது புளொட் உறுப்பினர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனியன்று காலை மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் வந்திறங்கிய இந்த ஒன்பது பேரையும் முன்னதாக கடற்படையினர்கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்திருந்தனர். இந்த ஒன்பது பேரும் இரண்டு வருடங்களுக்கு முன் இந்தியா சென்றவர்கள் எனக் கூறப்படுகின்றது.

## கொழும்பு விடுதியிலிருந்த இரு சகோதரர்கள் கைது

கொழும்பு ஆமர் வீதியில் இருக்கும் விடுதி ஒன்றில் வைத்து ரகுநாதன் புலேந்திரன், ரகுநாதன் ரவீந்திரன் என்னும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இவ்இருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சகோதரர்களான இவர்கள் இருவரும் வெங்காய வர்த்தகர்களைப் போல நடித்து பாதுகாப்பு படையினரின் சோதனைச் சாவடிகளை கடந்து வந்ததாகவும், லொறியொன்றில் வெடிப் பொருள்களை இவர்கள் கடத்தி வந்ததாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

இதேவேளை ஓட்டமாவடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியரான முகம்மது இஸ்மாயில் அப்துல்காதர் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், சைக்கிளில் வந்த இருவர் இவரைநோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு மறைந்துவிட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

### வர்த்தகர் கொலை

தமிழ் வர்த்தகர் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பிரபல தமிழ் வர்த்தகரான இவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டார் எனவும், கொழும்பு வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

### ஊரடங்கு

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத பகுதிகளில் நேற்றுக் காலை ஆறு மணி முதல் மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

## சிங்களப் படையினருக்கு பௌத்தபிக்கு பரிசில்

வடக்கு கிழக்கில் போரில் ஈடுபட்டுவரும் சிறிலங்காப் படையினருக்கு உற்சாகமூட்டுவதற்கு பௌத்தபிக்கு ஒருவர் ஈடுபட்டுவருகிறர். இதற்காக ''சிங்கள மகாஜன பெரமுன'' என்ற அமைப்பைச் சேர்ந்த வண. குணதிசதேரோ என்ற பிக்கு படையினருக்கு பரிசில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். பொதுமக்கள் படையினருக்கான பரிசில்களை தமது அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின்

## சுவரொட்டி ஒட்டிய 28 பேர் கைதாகினர்

(கண்டி)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர் 28 பேர் நேற்று முன்தினம் இரவு கண்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது,

இவர்கள் தேர்தல் விதிக்கு மாறாக சுவரொட்டிகளை ஒட்டியதினால் தாம் இவர்களை கைது செய்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதே வேளை இவர்கள் யாவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்த போதும் இவர்களின் சிலரை மட்டுமே விடுதலை செய்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இந்து சமுத்திரத்தில் ஐ. நாவின் அமைதி காக்கும் கடற்படை

## பசுபிக் இராணுவ மாநாட்டில் சிறிலங்கா அரசு ஆலோசனை

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் ஐக்கிய நாடுகள் சபை அமைதிகாக்கும் படை கடற்படையை ரோந்தில் ஈடுபடுத்த வேண்டும் என சிறிலங்காக அரசு ஆலோசனை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற பசிபிக் பிராந்திய இராணுவ ஒத்துழைப்புக்கான சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளின் மாநாட்டிலேயே இவ் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் சிறிலங்கா அரச தரப்பில் உரையாற்றிய கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இவ் ஆலோசனையை முன்வைத்தார்.

இம்முறை நிகழ்ச்சி நிரலில் இவ்விவகாரம் இடம் பெறவில்லை என்பதால் இது குறித்து ஆராயப்படவில்லை எனவும். ஆனால் இதுகுறித்து அங்கத்துவ நாடுகள் ஆர்வம் காட்டியதாகவும் தெரிவித்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அடுத்த ஆண்டு மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் இவ்விடயம் இடம்பெறுவது நிச்சயம் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை தீவிரவாதம், போதைப் பொருள் கடத்தல் என்பனவற்றுக்கு எதிராக கூட்டுக் கடற்படை ரோந்து குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாக வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

இதேவேளை இவ் இராணுவ மாநாட்டில் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் இராணுவத் தளபாட விநியோகம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

கடந்தமாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகிய இம் மாநாட்டில் சுமார் 25 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர். யுத்த விமானங்களின் உதிரிப்பாகங்களின் விநியோகம், படையினருக்கு உணவு விநியோகத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

## ஆயுர்வேத மாணவர் உண்ணாவிரதம் நிறுத்தம்

(கொழும்பு)

தேசிய ஆயுர்வேத மாணவர்களின் உண்ணாவிரதம் நேற்று கைவிடப்பட்டது. நேற்று சுகாதார அமைச்சரைச் சந்தித்த பின்னர் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்துதாம் உண்ணாவிரதத்தைதற்காலிகமாக ஒத்தி வைத்த போதும் ஏனைய போராட்டங்களை தொடர்ந்து நடாத்தப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்லூரியின் கூரைமீதுஏறி மறியல் போராட்டத்தை செய்வார்கள் என்றும் இன்று கண்டியில் மாபெரும் சுவரொட்டி போராட்டம் நடாத்த இருப்பதாகவும் தொடர்த்து காலி, மாத்தறை, பகுதியில் இப்போராட்டம் விரிவடைய இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அணு விபத்து

சைபீரியாவில் அணுக்கதிர் வீச்சு கசிவு நேற்று இடம்பெற்றுள்ளதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. யுரேனியத்தைக் கொண்டுள்ள தாங்கி ஒன்று வெடித்ததே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என ரஷ்ய சக்திவள அமைச்சு தெரிவித்துள்ளது.

அணுசக்தி உற்பத்தி தொழிற்சாலையிலிருந்து பல நூறு சதுர மைல்களுக்கு அணுக் கதிர் வீச்சு அவதானிக்கப் பட்டுள்ளதாக செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவில் தாக்குதலுக்கு புலிகள் திட்டமாம்

### இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவிப்பு

(டில்லி)

கடந்த ஜனவரியில் இந்திய கடற்படையினரின் நடவடிக்கையால் மரணமடைந்த விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கிட்டுவின்மரணத்திற்காக புலிகள் இந்தியாவில் பழிவாங்கல் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு வருவதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள முக்கிய விமான நிலையங்கள், கப்பல் துறைமுகங்கள் என்பவற்றை தாக்க திட்டமிட்டு வருவதாக அத்தினசரி மேலும் தெரிவித்துள்ளது.

## வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563)

### கொம்பக்ட் டிஸ்க்கில் புதிய பாடல்கள்

அண்மையில் வெளியான புதிய பாடல்கள் COMPACT DISC இல் வெளிவந்துள்ளது மாஸ்ரர் பிரதியாகப் பதிவு செய்ய விரும்பும் ஒலிப்பதிவு நிலையங்கள் - தொடர்பு கொள்ளுங்கள் S. சந்திரமோகன் (மோகன்)ஷண் றெக்கோடிங் ஸ்பொட், நவீன சந்தை, யாழ்நகர். (4082)

### வகுப்புக்கள்

SHORTHAND & TYPING- தமிழ், ஆங்கில மொழிகளில் வாரநாள்/வார இறுதி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். SCHOOL OF BUSINESS ADMINISTRATION, 16, 3rd Cross street, Jaffna. (சி/6349)

### விவாகப் பதிவுகள்

திருமதி சிவானந்தவள்ளீ அம்மாள் சங்கரப்பிள்ளை யாழ் பிரிவு விவாகப்பதிவாளர் சிவபதமடைந்ததையிட்டு பதிவுவேலைகள் அன்னாரது இல்லப்பணிமனை. 210, நாவலர் வீதியில்தொடர்ந்து நடைபெறுவதுடன் ஆலோசனைகளை 52, செம்மணிவீதி. நல்லூரிலும் பெற்றுக்கொள்ளலாம். P.S. திருச்செல்வம் பதில் விவாகப்பதிவாளர். [4638]

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

**பிரிவு III**

**DAY CLASSES** [8.00 - 2.00]

ஆரம்பம்: 08-04-93, 8.00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலங்கள் நடைபெறும்
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்,

சி-6336)

### பாலராசிரியராக

பாலராசிரியராக தபால்வழியிலும் சனி, ஞாயிறு நேரிலும், பயிற்சி பெறலாம். சனிக்கிழமைகளிலும் சந்திக்கலாம். க.பொ.த. [சா/த] கடைசித் தகைமை. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக்கல்லூரி. ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (சி-4083)

O/LEVEL முடிவுகளுக்காகக் காத்திருந்தவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

## Computer Programming in Basic Language

4 *MONTHS*

வகுப்புகள் ஆரம்பம்

**17-04-93** 10.30 மணி

Lectures BY
S. P. Sivapathasundaram M. I D. P. M. (Lond)

- இலவச அச்சடித்த பாடக்குறிப்புக்கள்
- கூடிய செய்முறைப் பயிற்சி
- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
- கட்டணம் மாதம் ரூ. 400/- மட்டுமே.

LOTUS 1-2-3 — an ideal Package for Accountants, Bankers & Managers
Commencement — 12-04-93

## School of Business Administration

(Pioneers in Computer Education)
16, 3rd *CROSS STREET*, JAFFNA
(சி-6348)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் கனகரத்னம் பரந்தாமன்

எம் கடன்பணி செய்து கிடப்பது எனும் வாக்கியத்திற்கமைய சிவத்தொண்டு சைவத்தொண்டு பல புரிந்து தனக்கென வாழா பிறர்கென வாழ்ந்து வழிகாட்டி சிவபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றி, அனுதாபச் செய்திகள் அனுப்பி மற்றும் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர். நண்பர்கட்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், எமது இல்லத்தில் 7-04-1993 இன்று (புதன்) நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், மறுநாள் 8-04-1993 (வியாழன்) வீட்டுக்கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

அன்பு மனைவி,
பிள்ளைகள்

(3389)

# விவாக சுபமுஹூர்த்த பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஆங்கிரச ஷு பங்குனி மீ 26ஆம் உ [08. 04. 93] வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரமும் இடப லக்கினமும் கூடிய காலை 8. 21 மணிமுதல் 10. 12 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

வண்ணை
சிவஸ்ரீ. சுப்பிரமணியக் குருக்கள்
தம்பதிகளின் புத்திரன்
திருநிறைச் செல்வன்
**பாலகணேஷசர்மா**
அவர்கட்கும்

மட்டுவில்
பிரம்மஸ்ரீ. ஜெகதீஸ்வர சர்மா
தம்பதிகளின் புத்திரி
திருநிறைச் செல்வி
**ஹேமலதா**
அவர்கட்கும்

அம்பிகையின் திருவருள் துணைகொண்டு கன்னிகாதானம் செய்து திருமாங்கல்ய தாரணமும், பாணிக்கிரகணமும் செய்ய பெரியோர்களால் நிச்சயித்து விவாகம் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராக கலந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வரவேற்புபசாரம் மாலை 4 மணிக்கு மணமகனில்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
இ. சுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகள்
[மணிஐயா]
விஸ்வலிங்கப் பிள்ளையார் தேவஸ்தானம்,
2/11. துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-6350)

## ஓராண்டு நினைவஞ்சலியும் திதியும்



## நினைவு கூருகின்றோம்... 1993-04-07

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா- கனகராயன குளப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். அசோக் (சரவணமுத்து வன்னியசிங்கம் - 1-ம்படிவம் சேமமடு-வவுனியா)

1986ஆம் ஆண்டு மட்டு - நொச்சிமுனைப் பகுதியில் சிறிலங்கா புலனாய்வுப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

தூர்த்தி (தம்பிப்பிள்ளை கருணாகரன் - நொச்சிமுனை-மட்டு.)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்ட-

டில்லிகணேஸ் (சின்னையா கணேசன் - நுணாவில் மேற்கு-சாவகச்சேரி - யாழ்.)

1991ஆம் ஆண்டு மட்டு - புலுட்டைமானோடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

## பாலகணேஷசர்மா
அவர்கட்கும்

## ஹேமலதா
அவர்கட்கும்

அம்பிகையின் திருவருள் துணைகொண்டு கன்னிகாதானம் செய்து திருமாங்கல்ய தாரணமும், பாணிக்கிரகணமும் செய்ய பெரியோர்களால் நிச்சயித்து விவாகம் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராக கலந்து தம்பதிகளை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வரவேற்புபசாரம் மாலை 4 மணிக்கு மணமகனில்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
இ. சுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகள்
[மணிஐயா]
விஸ்வலிங்கப் பிள்ளையார் தேவஸ்தானம்,
2/11. துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-6350)



# A/L 95 கலை - வர்த்தகம்
## ஆரம்பம்:- 10. 4. 93
காலை 8 மணி

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, [சி-6352] யாழ்ப்பாணம்.



# பாரதிதாசன் கல்வி நிறுவனம்
## BECON
### ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# A/L 95 கலை,வர்த்தகம்

நேர அட்டவணை

| ஆசிரியர் | பாடம் | சனி, ஞாயிறு நேரம் |
|---|---|---|
| திரு. பசில் | வர்த்தகம் | 7.00 — 8.00 |
| திரு. பாலா | இந்துநாகரிகம் | 8.00 — 9.00 |
| திரு. கொலின்ஸ் | கிறிஸ்தவம் | 8 00 — 9.00 |
| திரு. சௌந்தி | கணக்கியல் | 9 00 — 10 00 |
| திரு. வரதராஜன் | பொருளியல் | 10.00 — 11.00 |
| திரு. மனோகரன் | அளவையியல் | 11.00 — 12 00 |
| திருமதி மீரா | தமிழ் | 12.00 — 1.00 |
| திரு. ஜோசப் | புவியியல் | 1.00 — 2.00 |
| திரு. பஞ்சாட்சரம் | அரசியல் | 2.00 — 3.00 |

[சி-6347] **ஆரம்பம் : 10-04-93 சனி**



## Administration
(Pioneers in Computer Education)
16, 3rd *CROSS STREET*, JAFFNA
(சி-6348)


## ஓராண்டு நினைவஞ்சலியும் திதியும்



## கப்டன்உருத்திரா (பாவலன்)

(சற்குணநாதன் ஜீவரத்தினம்)

வீரச்சாவு: 22- 12- 1970
வீரப்பிறப்பு: 19- 03- 1992

'பொன் இல்லம்' வீரமாணிக்கதேவன்துறை
மயிலிட்டி

திதி: 07. 04. 93

இன்றுவரை ஆண்டொன்று உருண்டோடினும்
அன்பின் அலைகள் பொங்கி எம்மை வதைக்குதடா
பெற்ற எம்மைத் துறந்து தமிழீழமே
உற்றதாயெனக் கொண்டு நீ கொண்டாய்
நாமிட்ட பெயர் மாற்றி பாவலனாய்
கப்டன் உருத்திரனாய் தமிழீழத் தாய்தந்த
நாமங்கள் சூடி ஆற்றிய வீரச்செயல்கள்
எம்மைப் பெருமித உச்சத்திற்கு எடுத்துச் சென்றனவே
அந்தோ மைந்தா மாவீரன் ஆனாய் என்ற செய்தி
விந்தைமிகு வானத்துக்கு அப்பால் எம் எண்ணங்களை
இழுத்துச் சென்று
உன்னைத் தேடித்தேடி அன்புக்கண்ணீர் சொரிந்து
அலைகின்றனவே

இவருடன் மாவீரர்களான வீரர்களுக்கு எமது அஞ்சலி

இன்று எமதில்லத்தில் நடைபெறும் திதி நிகழ்வுகளில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வழக்கம்பரை,
அம்மன் கோவிலடி,
சுழிபுரம்.
– குடும்பத்தினர்
(4632)

# 1993-04-07

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா- கனகராயன குளப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். அசோக் (சரவணமுத்து வன்னியசிங்கம் - 1-ம்படிவம் சேமமடு- வவுனியா)

1986ஆம் ஆண்டு மட்டு - நொச்சிமுனைப் பகுதியில் சிறிலங்கா புலனாய்வுப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

தூர்த்தி (தம்பிப்பிள்ளை கருணாகரன் - நொச்சிமுனை- மட்டு. )

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்ட-

டில்லிகணேஸ் (சின்னையா கணேசன் - நுணாவில் மேற்கு-சாவகச்சேரி - யாழ். )

1991ஆம் ஆண்டு மட்டு - புலுட்டைமானோடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

தனு/பானு ( - கல்லடி - மட்டு. )
நாவேந்திரன்/சதா ( - மட்டு. )
தேவிராஜ் [ - ஈச்சந்தீவு - மட்டு. ]

யாழ் - குப்பிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ஞானம் (மணியம் வீரசிங்கம் - மாவடிச்சேனை. வெருகல் - திருமலை )
சுபன் (கணபதிப்பிள்ளை குவேந்திரராசா -ஆலங்கேணி- திருமலை )

மட்டு - வாகரைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

2–ம் லெப். மது (சின்னத்தம்பி சுரேன் - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)

அம்பாறை சின்னவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் சங்கர் (முருகேசு நடேஸ் - முனைத்தீவு, பெரியபோரதீவு - மட்டு. )
ஆனந்தகுமார் (சோமசுந்தரம் மகாலிங்கம்-முனைக்காடு, கொக்கட்டிச்சோலை - மட்டு.)

கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்த நிலையில் வீரச்சாவெய்திய-

மைக்கல் (அன்ரனி ஜெபநேசன் ஜீவநாயகம் - மிருசுவில் வடக்கு, கொடிகாமம் - யாழ். )

வானாற்றில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ஈஸ்வரன் [அருளானந்தன் ஈஸ்வரதாஸ் - கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

மட்டு - தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

2–ம் லெப். கிருபா (செல்லத்தம்பு ராமச்சந்திரன்- புதூர் - மட்டு. )
கேசவன் ( - மூர்த்தி - புதூர் - மட்டு. )

1992ஆம் ஆண்டு மட்டு நகர்ப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த-

பிறேமன் [இராசையா தேவதாஸ் - திருக்கோயில், பழுகாமம் - மட்டு. )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி/6346)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

அவதந்திரம் எப்போதும் தனக்கு அந்தரம்.
— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அரசியல் வங்குரோத்தான ஜனநாயக ஐ.தே.முன்னணி

தேர்தல் கால பரப்புரைகளில் அரசியல் வாதிகளின் வாக்குறுதிகளுக்குப் பஞ்சமில்லை. இவை பல வேளை வெற்று வேட்டுக்களாவும், சில அவர்களின் உண்மைச் சொரூபத்தின் வெளிப்பாடாகவும் இருந்து விடுவதும் உண்டு. இதில், இரண்டாவது வகையைச் சேர்ந்ததே சிறிலங்கா-இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆதரிக்கும் என்ற அறிவிப்பாகும்.

இதனை ஜ. ஐ. தே. முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்காவே அறிவிப்புச் செய்துள்ளார். ''1987-ம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தை தமது முன்னணி ஆதரிக்கும்'' என்பதே அவரது அறிவிப்பாகும். திரு. காமினி திசநாயக்காவின் இவ் அறிவிப்பானது, புதை குழியில் இருந்து சவத்தைத்தோண்டி எடுத்து அதற்கு உயிர் கொடுக்க முற்படும் ஒரு மந்திரவாதியின் செயலை ஒத்ததாகும்.

சிறிலங்கா - இந்திய சமாதான ஒப்பந்தமானது 1987இல் கைச்சாத்தாகி ஒரு சில மாதங்களிலேயே தோல்வியைத் தழுவிக் கொண்டது. அதாவது விடுதலைப்புலிகளுக்கு எதிராக எப்பொழுது இந்திய இராணுவம் தாக்குதலை ஆரம்பித்ததோ அன்றிலிருந்தே நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்துவிட்டது.

ஆனால், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் ஒப்பந்தம் மரணித்துவிடக்கூடாது என்று எவ்வளவோ முயற்சித்தும், 1990இல் இந்திய இராணுவம் தமிழ்ப் பிரதேசத்தை விட்டு வெளியேறியதுடன் ஒப்பந்தம் தவிர்க்க முடியாமல் மரணத்தைத் தழுவிக் கொண்டது.

இவ் ஒப்பந்தத்தை ஆரம்பம் முதலே தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இவ் ஒப்பந்தம் சிறிலங்கா அரசிற்கும் இந்திய அரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டமையினால் ஒப்பந்தம் மரணித்த போதும். ஜே. ஆரின் ஆட்சிக்காலம் வரை முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒன்றாக மாறவில்லை.

ஆனால், திரு. பிரேமதாசா சிறிலங்காவின் ஜனாதிபதியாக பதவி ஏற்றபின், இந்திய இராணுவத்தை 'ஆக்கிரமிப்பு இராணுவம்' என அறிவித்ததுடன் சிறிலங்கா - இந்திய உடன்படிக்கை முற்றாகத் தோல்வி அடைந்து விட்டது என்பதே

# சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை தனிப் பீடமாக விரிவுபடுத்தி இயக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் கைதடி வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக பெயர் மாற்றி அபிவிருத்தி செய்வதற்கும் உயர்கல்வி அமைச்சு மற்றும் மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அண்மையில் மேற்படி விடயம் சம்பந்தமாக கொழும்பு சென்ற கைதடி சித்த மருத்துவத்துறை மாணவர் மன்றக் குழு உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் திரு. அலுவிகார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆகியோரைச்சந்தித்து யாழ்.குடாநாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் கைதடி சித்த மருத்துவத்துறை மற்றும் கைதடி வைத்தியசாலைஆகியவைமிகுந்த நெருக்கடிகளின் மத்தியிலும் இயங்கி வருகின்ற நிலைமையினை தெளிவுபட விளக்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து சித்த மருத்துவ மாணவர் மன்றக்குழு முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

ஃ யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களுக்கான உதவிப் பணக்கொடுப்பனவு ஆயிரம் ரூபாவில் இருந்து இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

ஃ மாணவர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்த இரண்டு லீற்றர் மண்ணெண்ணெயை மாதாந்தம் நான்கு லீற்றராக வழங்க வேண்டும். (மேற்படி கொடுப்பனவுகள் பொருள்களாகவே வழங்கப்படவுள்ளதாகவும் எக்காரணம் கொண்டும் பணமாக வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டது.)

ஃ சித்த மருத்துவத் துறையைத் தனி ஒரு பீடமாக இயங்குவதற்கு அனுமதிக்கும் படியும்,

ஃ சித்தமருத்துவ விரிவுரையாளர்களை உயர் படிப்பிற்கு சீனா, இந்தியா போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்கு அனுமதிக்கும் படியும்,

ஃ சித்தமருத்துவ மாணவர்கள் ஆறாம் வருடத்தில் உள்ளகப்பயிற்சியில் ஈடுபடும் பொழுது 2750 ரூபா வழங்கப்படுகின்றது இதனை 5600 ரூபா ஆக அதிகரிக்க வேண்டும் எனவும் (இக்கோரிக்கை அமைச்சரவை மட்டத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது). கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரைச் சந்தித்து மேற்படிகுழு கைதடி வைத்தியசாலையின் அபிவிருத்தி சம்பந்தமாக நடாத்திய பேச்சுக்களின் முடிவில்,

ஃ கைதடி வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்த இருப்பதனால் இதற்கான வைத்திய மேலதிகாரியை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டனர் இதனை ஏற்றுக் கொண்ட அதிகாரியிடம் யாழ். மாவட்டத்தில் தகுதியுடைய ஒருவரை குறிப்பிட்டு மேற்படி குழுவினர் நியமிக்க சிபார்சுகளை செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

ஃ கைதடி வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி இயங்குவதனால் ஒரு அம்புலன்சும் ஜெனரேற்றர் ஒன்றும் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றும் வழங்கும்படியும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜெனரேற்றர் நீரிறைக்கும் யந்திரம் என்பன வழங்க உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், அம்புலன்ஸ் வழங்குவதற்கு சில மாதங்கள் தாமதமாகுமெனவும், இதற்கென முகவர் ஒருவர் தேவை எனவும். கொள்வனவு செய்ய யாழ். அரச அதிபரின் சிபார்சும் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டது என தெரியவருகின்றது. (பா)

பொது எழுதுவினைஞர்களுக்கான

## வினைத்திறமைப் பரீட்சை இரு மாதங்களில் நடக்கலாம்

பொது எழுதுவினைஞர் சேவையில் உள்ள ஊழியர்களுக்கான வினைத்திறமை காண் பரீட்சை ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

இது பற்றி பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு விரைவில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள நடைமுறைகளின்படி பொது எழுதுவினைஞர் சேவையின் தரம் II ஏ பிரிவிலுள்ள ஊழியர்கள் பத்தாண்டுகாலம் சேவை ஆற்றியதும் இயல்பாகவே பதவி உயர்வு பெறுவதற்கு உரிமை கொண்டுள்ளார்கள். எனினும் இந்த நடைமுறை சில காலமாக பின்பற்றப்படவில்லை என ஒருங்கிணைந்தசேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இப் பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தல் இரண்டு வாரங்களினுள் வெளியிடப்படும் என்றும், இரண்டுமாதங்களுக்கு இடையில் பரீட்சை நடத்தப்படும்என்றும் நாற்பது புள்ளிகளுக்கு மேல் பெறும் எவரும் உடனடியாக பதவி உயர்த்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் நாடெங்கும்இருந்து சுமார் 5,000 பேர் வரையில் பரீட்சைக்கு தோற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பனை வெல்லத்திற்கு விலை நிர்ணயம்

தமிழீழத்தில் தேசிய வளங்களுள் ஒன்றான பனை வளத்தின் உச்ச பதனீர் உற்பத்திக் காலம் இதுவாகும். இதனைப் பயன்படுத்தி பனை வெல்ல உற்பத்தி தற்போது அமோகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ பனை வெல்லத்தின் சில்லறை வீற்பனைவிலை 40 ரூபாவாகவும் மொத்த

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் எதிர்வரும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பனைமரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல் ஆகிய போட்டிகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தாயே உன் தற்கொடைக்கு ஈடு உண்டோ?

பூபதியே!
பூவுலகின் நாயகியே!
உண்ணா நோன்பிருந்தாய்
உண்மையதை உணர்த்திடவே
காந்தியம் பேசி நிற்கும்
காந்தி தேசத்தின்
முகமூடி கிழிக்கவென - ஈழத்தில்
முனைந்து நின்றாய்!
சமாதானத்தின் காவலனென்று கூறி
சமாதானப்படையென வந்த
சதிப்படையை
சத்திய வேள்வியில்
தாயே நீகுதித்து - காந்திதேசத்தை
தலை குனிய வைத்தாய்
தாயக விடிவிற்கு
தாயே உன் இன்னுயிரளித்தாய்
ஈழதேசத்தின்
விடிவெள்ளியானாய்
விடியலின் பாதைக்கு
வித்தாக ஆனாய்!
தமிழரின் மனதில்
தாயாக ஆனாய்!
தாயே உன்
தற்கொடைக் கீடேதுமுண்டோ.

— பாவன்னாசீனா

## பொருள் விலை உயர்விற்கு மத்திய அரசே காரணமாகும்

—ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

மாநிலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்விற்கு மத்திய அரசே காரணமாகும் என்று தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய தேசிய வளர்ச்சி சபையின் கூட்டத்தில் தமிழக முதல்வர் சார்பில் தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தாக்கல் செய்த அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய வளர்ச்சி சபையின் கூட்டத் தொடரில் ஏனைய மாநில முதல் அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் கலந்து கொண்டபோதும் தமிழகத்தின் சார்பில் மாநில நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திரிபுரா மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணிதோல்வி

திரிபுரா மாநிலத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சியானஇந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. அறுபது ஆசனங்களைக் கொண்ட சட்டப் பேரவையில் இதுவரை அறிவிக்கப்பட்ட முப்பத்தாறு இடங்களில் மார்க்சிய கம்யூனிஸ்ட் இருபத்தெட்டு இடங்களையும், ஆர். எஸ். பி. ஓர் இடத்தையும், பார்வாட் பிளக் இரு இடங்களையும் பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி மூன்று இடங்களையும், டி. யூ. ஜே. எப். ஓரிடத்தையும், சுயேட்சைக்கு ஓரிடமும் கிடைத்துள்ளது.

## காங்கிரஸ் வெளிநடப்பினால் சபை நேரம் வீணாகிறது

- ஆளுநரிடம் நெடுஞ்செழியன் தெரிவிப்பு

அன்றிலிருந்தே நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்துவிட்டது.

ஆனால், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் ஒப்பந்தம் மரணித்துவிடக்கூடாது என்று எவ்வளவோ முயற்சித்தும், 1990இல் இந்திய இராணுவம் தமிழ்ப் பிரதேசத்தை விட்டு வெளியேறியதுடன் ஒப்பந்தம் தவிர்க்க முடியாமல் மரணத்தைத் தழுவிக் கொண்டது.

இவ் ஒப்பந்தத்தை ஆரம்பம் முதலே தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இவ் ஒப்பந்தம் சிறிலங்கா அரசிற்கும் இந்திய அரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டமையினால் ஒப்பந்தம் மரணித்த போதும், ஜே. ஆரின் ஆட்சிக்காலம் வரை முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒன்றாக மாறவில்லை.

ஆனால், திரு. பிரேமதாசா சிறிலங்காவின் ஜனாதிபதியாக பதவி ஏற்றபின், இந்திய இராணுவத்தை 'ஆக்கிரமிப்பு இராணுவம்' என அறிவித்ததுடன் சிறிலங்கா - இந்திய உடன்படிக்கை முற்றாகத் தோல்வி அடைந்து விட்டது என்பதே உண்மையாகும்.

ஆனால், இந்தியா அதனை ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், ராஜீவ்காந்தியின் மரணத்தின் பின்னர், படிப்படியாக இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் முற்றாக செயலிழந்து போய் விட்டது என்பதை இந்தியா ஏற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டது. தற்பொழுது இவ் ஒப்பந்தம் முற்றாக செயலிழந்து போய்விட்டது என்பதை இந்திய அதிகாரிகளே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேலும், மாறிவரும் உலக அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப தன்னைத் தயார்படுத்திவரும் இந்தியாவின் நடத்தைகளும் ஒப்பந்தத்தை அர்த்தமற்றதாக்கியுள்ளது. சிறிலங்கா - இந்தியா சமாதான உடன்படிக்கையின் மூலம் மொசாட் போன்ற உளவு ஸ்தாபனங்களை இலங்கையில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனவும். அமெரிக்காவின் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு சேவைக்கு நிலம் வழங்குவதை கைவிடவேண்டும் எனத் தடைவிதிக்க முற்பட்ட இந்தியா தற்பொழுது, இஸ்ரேலிய உளவு ஸ்தாபனத்துடன் ஒட்டி உறவாடுவதுடன், இஸ்ரேலிடம் இருந்து நவீன தொழில் நுட்பத்தையும், போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதிலும், அமெரிக்காவிடம் இருந்தும் நவீன தொழில் நுட்பத்தைப் பெற முயற்சிப்பதோடு. கூட்டாகக் கடற்படை ஒத்திகையிலும் ஈடுபட்டது. அத்தோடு அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள உலக நிதி நிறுவனங்களின் சிபார்சுகளுக்கு ஏற்ப பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் செய்துவருகின்றது.

இந்நிலையில், ஐ. ஐ. தே. முன்னணியின் அறிவிப்பானது அரசியல் வங்குரோத்துத்தனத்தின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். திரு. காமினி திசநாயக்கா சிறிலங்கா - இந்திய சமாதான உடன்படிக்கையை நேரடியாக ஆதரித்தவர் என்பதில் எவருக்கும் சந்தேகம் இல்லை. இது அன்றைய சூழ்நிலையில், அடுத்த பிரதமரோ அன்றி ஜனாதிபதியோ யார் என்றநிலையில், திரு. பிரேமதாசாவின் இந்திய எதிர்ப்பு வியூகத்தின் பின்னணியில் வெளிப்படுத்தப்பட்ட போதே அதற்குப் பலமிருந்தது.

ஆனால், இன்று பிரேமதாசா - இந்திய கெடுபிடிப் போர் முடிவுற்று மாற்றமடைந்துள்ள ஓர் அரசியல் சூழ்நிலையில் திரு. காமினி திசநாயக்காவின் இந்நிலைப்பாடு அவர் எதிர் பார்ப்பது போன்று இந்தியாவின் ஆதரவை அவருக்குப் பெற்றுத்தருமா? ஆட்சியைக் கைப்பற்ற உதவுமா? என்பது கேள்விக்குரியதே. இது காமினி திசநாயக்காவிற்கும் நிகழ்கால அரசியலுக்கும் இடையிலான தூரம் அதிகரித்துச் செல்கின்றதா என்ற கேள்வியை எழுப்புவதாகவே உள்ளது.

---

தற்போதுள்ள நடைமுறைகளின்படி பொது எழுதுவினைஞர் சேவையின் தரம் II ஏ பிரிவிலுள்ள ஊழியர்கள் பத்தாண்டுகாலம் சேவை ஆற்றியதும் இயல்பாகவே பதவி உயர்வு பெறுவதற்கு உரிமை கொண்டுள்ளார்கள். எனினும் புள்ளிகளுக்கு மேல் பெறும் எவரும் உடனடியாக பதவி உயர்த்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் நாடெங்கும்இருந்து சுமார் 5,000 பேர் வரையில் பரீட்சைக்கு தோற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பனை வெல்லத்திற்கு விலை நிர்ணயம்

தமிழீழத்தில் தேசிய வளங்களுள் ஒன்றான பனை வளத்தின் உச்ச பதனீர் உற்பத்திக் காலம் இதுவாகும். இதனைப் பயன்படுத்தி பனை வெல்ல உற்பத்தி தற்போது அமோகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ பனை வெல்லத்தின் சில்லறை வீற்பனைவிலை 40 ரூபாவாகவும் மொத்த விற்பனை விலை 37 ரூபாவாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பனை அபிவீருத்திச் சபை ஆகியவற்றின் விற்பனை நிலையங்களிலும் தனியார் விற்பனை நிலையங்களிலும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் எதிர்வரும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பனைமரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல் ஆகிய போட்டிகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போட்டியிலே கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 12-04-93 ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னதாக தமது பகுதி கிராமிய உற்பத்திக்குழுக்களூடாக அண்மையில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும்வேண்டப்படுகின்றனர்.

---

மேற்படி குழுவினர் நியமிக்க சிபார்சுகளை செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

ஃ கைதடி வைத்திய சாலையில் மகப்பேற்று விடுதி இயங்குவதனால் ஒரு அம்புலன்சும் ஜெனரேற்றர் ஒன்றும் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றும் வழங்கும் படியும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜெனரேற்றர் நீரிறைக்கும் யந்திரம் என்பன வழங்க உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், அம்புலன்ஸ் வழங்குவதற்கு சில மாதங்கள் தாமதமாகுமெனவும், இதற்கென முகவர் ஒருவர் தேவை எனவும். கொள்வனவு செய்ய யாழ். அரச அதிபரின் சிபார்சும் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டது என தெரியவருகின்றது. (பா)

## உரையரங்கு

(குருநகர்)

யாழ். பிரதான வீதி திருமறைக்கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 4-30 மணிக்கு சைவசித்தாந்தஆய்வு வட்டக் கருத்தரங்கு நடைபெறும்.

''ஈழத்தில் சைவசித்தாந்தம்'' என்னும் பொருளில் தொடர் உரையின்மூன்றாவது பேச்சை இன்று பேராசிரியர் வண.மரிய சேவியர் அடிகள் நிகழ்த்துவார். (21)

---

வர் சார்பில் தமிழக நிதி ... குறிப்பிடத்தக்கதாகும்.

# திரிபுரா மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணிதோல்வி

திரிபுரா மாநிலத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சியானஇந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. அறுபது ஆசனங்களைக் கொண்ட சட்டப் பேரவையில் இதுவரை அறிவிக்கப்பட்ட முப்பத்தாறு இடங்களில் மார்க்சிய கம்யூனிஸ்ட் இருபத்தெட்டு இடங்களையும், ஆர். எஸ். பி. ஓர் இடத்தையும், பார்வாட் பிளக் இரு இடங்களையும் பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி மூன்று இடங்களையும், டி.யூ.ஜே.எப். ஓரிடத்தையும், சுயேட்சைக்கு ஓரிடமும் கிடைத்துள்ளது.

# காங்கிரஸ் வெளிநடப்பினால் சபை நேரம் வீணாகிறது

## - ஆளுநரிடம் நெடுஞ்செழியன் தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்பு என்ற பெயரில் அடிக்கடி வெளிநடப்பு செய்வதால் பேரவையின் நேரம் வீணடிக்கப்படுவதாக தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆளுநர் மாளிகையில் ஆளுநரைச் சந்தித்த நெடுஞ்செழியன் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சியுடன் ஒத்துழைப்பதாக இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

இதேவேளை ஆளுநரைச் சந்தித்த காங்கிரஸ் கட்சியின் தூதுக் குழு ஒன்று பீட்டர் அல்போன்ஸ் சட்டப்பேரவை உறுப்பினர் விடுதியிலும், டாக்டர் செல்வகுமார் சட்டப் பேரவையிலும் வைத்து தாக்கப்பட்டமையினையும் சுட்டிக் காட்டி எதிர்க்கட்சியினருக்கு சட்டப்பேரவையிலும், வெளியிலும் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்திருந்தனர்.

## தீ விபத்து விசாரணை

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் நரோடா அணு உலை ஒன்றில் கடந்த புதனன்று ஏற்பட்ட தீ விபத்து பற்றி ஆராய மற்றுமொரு கமிஷன் நியமிக்கப் படவுள்ளது.

அணு உலையிலிருந்து சுமார் இருபத்தைந்து மீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்த தீ விபத்தினால் அணு உலை சேதமடையவில்லை என்றும், ஊழியர் எவரும் கதிர்வீச்சு பாதிப்புக்கு உள்ளாகவில்லை என்றும் அணுசக்தி கமிஷன் தலைவர் ஆர். சிதம்பரம் பம்பாயில் செய்தியாளர்களிடம்கூறியிருந்தது தெரிந்ததே.

## வாகனங்கள் அனுப்பப்படும்

பொஸ்னியாவில், முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் செபனிக்கா பகுதியிலிருந்து சுமார் பதினையாயிரம் முஸ்லிம்களை திருப்பியழைக்க அன்றாடம் வாகனங்கள் அனுப்பப்படும் என்று ஐ. நா தனது திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி நாளாந்தம் இருபது ட்றக் வண்டிகள் அனுப்பப்படும் என்றும் இன்று முதல் அவைசெபனிக்கா செல்லும் என்றும் சரஜேவோவாவில் இருக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

---

# சந்தை விலைவிபரம் (05-04-1993)

## சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரியகடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 33.00 | 31.30 | 33.60 | 32.00 | 37.30 | 36.50 | 34.00 | 36.00 |
| 02. | கோதுமை மா | ,, | 18.00 | 15.60 | 14.60 | 15.20 | 13.30 | 17.00 | 21.00 | 18.00 |
| 03. | சீனி | ,, | 40.00 | 41.60 | 42.00 | 43.00 | 40.00 | — | 45.00 | 45.00 |
| 04. | கத்தரி | ,, | 25.60 | 29.30 | 19.30 | 24.30 | 18.60 | 30.00 | 30.60 | 22.00 |
| 05. | வெண்டி | ,, | 40.50 | 34.30 | 30.00 | 21.00 | 26.00 | — | 38.60 | 41.00 |
| 06. | பாகல் | ,, | 30.00 | 34.00 | 35.00 | 28.30 | 35.00 | 25.00 | 31.30 | 38.00 |
| 07. | புடோல் | ,, | 23.00 | 18.30 | 20.00 | 20.60 | 15.00 | 30.00 | 46.00 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 44.50 | 45.60 | 35 00 | 32.60 | 35.00 | 50.00 | 58.30 | 42.35 |
| 09. | தக்காளி | ,, | 31.15 | 35.00 | 35.15 | 44.30 | 40.00 | 35 00 | 27.30 | 40.00 |
| 10. | வாழைக்காய் | ,, | 23.00 | 28.00 | 24.00 | 24.00 | 30.00 | 25.00 | 28.00 | 34.00 |
| 11. | பீற்றூட் | ,, | 14.50 | 15.50 | 10.00 | 15.00 | 13.60 | 15.00 | 22.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 27.30 | 23.50 | 30.00 | 33.80 | 30.00 | 24.00 | 30.50 | 25.80 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 15.50 | 23.50 | 17.30 | 26.60 | 16.00 | 22.00 | 22.00 | 22.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 103.30 | 103.25 | 113.30 | 126.60 | 80.00 | 90.00 | 113.30 | 100.00 |
| 15. | வெங்காயம் | ,, | 12.00 | 19.40 | 19.30 | 13.00 | 16.25 | 17.50 | 10.60 | 19.50 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 30.00 | 35.50 | 35.00 | 30.00 | 30.00 | 40.00 | 35.00 | 30.00 |
| 17. | இறால் | ,, | 90.00 | 82.50 | 80.00 | 71.60 | — | 80.00 | 90.00 | 60.00 |
| 18. | பெரியமீன் | ,, | 170.00 | 136.25 | 150.00 | 115.00 | — | 77.50 | 107.50 | 92.50 |
| 19. | சிறியமீன் | ,, | 160.00 | 87.50 | 80.00 | 86.25 | — | 50.00 | 34.15 | 40.00 |
| 20. | முட்டை | ஒன்று | 7.50 | 8.15 | 7.60 | 8.25 | 8.00 | 8.00 | 8.15 | 7.15 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

ஈழநாதம்

## இரு தரப்பு உறவு பலமாகும் மொறீசியஸ் அதிபர் அறிவிப்பு

(டில்லி)

பொருளாதார மற்றும் கலாசார உறவுகளைமேலும் வலுப்படுத்த தமது பயணம் உதவியிருப்பதாக மொறீசியஸ் நாட்டின் அதிபர் கூறியுள்ளார்.

அவர் ஜெய்பூர் புறப்படுவதற்கு முன்பாக குடியரசுத் தலைவர் மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய போது மேலும் கூறுகையில்; இந்தியத் தலைவர்களுடனான தமது பேச்சுக்கள் பயன் மிகுந்ததாக இருந்ததாகவும், பல முக்கிய விடயங்களில் இரு நாடுகளும் ஒத்த கருத்தையே கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மொறீசியஸ் அதிபரை வழியனுப்பும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர், பிரதமர் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க. உறுப்பினரால் குமரி அனந்தன் மிரட்டல்

(சென்னை)

அ. தி. மு. க உறுப்பினர் ரமேஷ் தம்மை மிரட்டியதாக காங்கிரஸ் பிரமுகரான குமரி அனந்தன் நேற்று சட்டப்பேரவையில் குற்றஞ்சாட்டினார். தாம் பேரவை நூலகத்தில் இருந்தபோது அங்குவந்த ஆளும் கட்சி உறுப்பினர் ரமேஷ், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்ட அ. தி. மு.க உறுப்பினர்களில் தமது பெயரும் இருப்பதாக நான் கூறியதை சுட்டிக்காட்டி 'நீ உயிருடன்இருக்கமுடியாது' என என்னை மிரட்டினார் என குமரி அனந்தன் கூறினார்.

எனினும் தாம் அவரை மிரட்டவில்லை என ரமேஷ் சட்டப்பேரவையில் இதற்கு பதிலளித்தபோது குறிப்பிட்டார். குமரி அனந்தன் மீது தமக்கு மதிப்பும் மரியாதையும் இருப்பதாகவும் அ. தி. மு. க. எம். எல். ஏ. மேலும் தெரிவித்தார்.


UNIKCO
COMPUTER CENTRE

INTRODUCTION TO COMPUTER AND COMPUTER GAMES

9, 10, 11 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

10-04 93 காலை 10.00 மணிக்கு நடைபெறும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பரீட்சைக் கட்டணம் 50/-

அத்துடன்

- BASIC
- PASCAL
- d BASE III PLUS
- LOTUS 1-2-3
- WORD PROCESSING (WORDSTAR Rel 5.5)

09-04-93 [திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்]
10-04-93 [சனி, ஞாயிறு வகுப்புக்கள்]
புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளன.

★ குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ள இருப்பதால் இன்றே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:-

UNIKCO COMPUTER CENTRE


### பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒன்றுகூடல்

யாழ். குடாநாட்டில் சகல கல்விக் கோட்டங்களிலும் சென்ற ஆண்டு நியமனம் பெற்ற சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 10-ம் திகதி காலை 10மணிக்கு யாழ்.வை. எம் சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது

வடமாநில ஓய்வூதியர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் ஆங்கில மொழி கற்றல் கற்பித்தல் போன்ற விடயங்கள் ஆலோசனைகள் ஆராயப்படும் என்றும் தொடர்ந்து சம்மேளனத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும் என்றும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### 75 வது ஆண்டு விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவும், மலர்வெளியீடும் இன்று புதன்கிழமை கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் குகபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இவ் விழாவில் முன்னாள் உப அதிபர் சிவராமலிங்கம் மலர் ஆய்வு உரையைநிகழ்த்தவுள்ளார்.

### உற்சவம்

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இவ்உற்சவகாலத்தில் தினமும் இரவு 7.30மணிக்கு திருவாசக திருமந்திரச் சிந்தனைகள் எனும் பொருளில் சிவ. மகாலிங்கம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார். எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 15 ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் இடம் பெறவுள்ளன.


ஏப்ரல் 10 முதல்

க.பொ.த சாதாரணதரம்
O/L
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

சி-(6337)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

95 கலை, வர்த்தக


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 06-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 8961

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-0512

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-9992, 27-9305, 26-4510, 24-6941, 26-5202, 26-4393, 28-1730, 26-2786, 28-8367, 26 3412, 41-8557, 24-5418, 24-8364, 27-7263, 27-2496, 42-1320, 28-9449, 41-4176, 26-3582, 27-6063, 27-5077, 27-9649, 41-3931.


NEW
SCIENCE ACADEMY
எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்

95 A/L
WEEKEND CLASSES

| | | |
|---|---|---|
| Chemistry | 9-00 | திரு. சண் |
| Botany | 11-00 | திரு. குணசீலன் |
| Zoology | 12-00 | திரு. தம்பிராஜா |
| Physics | 12-00 | திரு. கணேசன் |
| Chemistry | 1-00 | திரு. மணியம் |
| Physics | 2-00 | திரு. சோதிலிங்கம் |
| Pure / Applied Maths | 4-00 | திரு. வெக்டர் |

10-04-93 சனிக்கிழமை முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: மாணவர் தொகை 200 ஆக மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-6355)

கணக்காளர் பதவி வெற்றிடம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருப்பவர்கள் 21-04-93 க்கு முன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பொருத்தமான ஊதியம் வழங்கப்படும்.

தகுதிகள் :
1. கணக்கியல் டிப்புளோமா
2. வர்த்தகமாணிப் பட்டப்படிப்பு
(மேற்படி கல்வித் தகுதிகளுடன் குறைந்தது 2 வருட அனுபவம் இருத்தல் விரும்


### உற்சவம்

(சுன்னாகம்)

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. வியாழக்கிழமை கொடியேற்றமும், 16ஆம் திகதி தேர் உற்சவமும் பிராயச்சித்த அபிசேகமும் இடம்பெறும். மகோற்சவ காலத்தில் காலை 8-30 மணிக்கும், மாலை 3-30 மணிக்கும் அபிடேக ஆராதனைகள் ஆரம்பமாகும். (11)

### விவேகானந்தர் நூற்றாண்டு

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்வு பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஊர்வலத்துடன் ஆரம்பமாகும்.

இந்நூற்றாண்டு நிகழ்விற்கு பாடசாலையின் அதிபர் திரு. செ. தங்கராசா தலைமை வகிப்பார்.

சுவாமி சித்ரூபானந்தாவின் சிறப்பு உரையும் நடைபெறும். (24)

### விளையாட்டு

யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பி.ப. 2.30மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. சி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும். இதில் சாவகச்சேரி வடநகர்க் கொத்தணி அதிபர் திரு. க. சந்திரசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### பழனி இடைத்தேர்தல்

தமிழக பழனி நாடாளுமன்றம் மற்றும் ராணிப்பேட்டை சட்டப்பேரவை ஆகியவற்றுக்கான இடைத்தேர்தல்கள் அடுத்தமாதம் 19 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணி முறிந்துவிட்ட நிலையில் இத்தேர்தல் இரு கட்சிகளுக்கும் ஒரு பலப்பரீட்சையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதைத் தவிர தி. மு. க, பாட்டாளி மக்கள்கட்சி என்பனவும் தமது பலத்தை பரீட்சிக்கும் ஒரு களமாக இது இருக்கும்.

இதேவேளை இத்தேர்தலில் பாரதீய ஜனதாவும் போட்டியிடலாம் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### மாணவ

கிழமைவரைசகலபல நோக்குக் கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் மாத மாணவர்

## INTRODUCTION TO COMPUTER AND COMPUTER GAMES

9, 10, 11 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

10-04 93 காலை 10.00 மணிக்கு நடைபெறும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பரீட்சைக் கட்டணம் 50/-

அத்துடன்

- BASIC
- PASCAL
- d BASE III PLUS
- LOTUS 1-2-3
- WORD PROCESSING (WORDSTAR Rel 5.5)

09-04-93 [திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்]
10-04-93 [சனி, ஞாயிறு வகுப்புக்கள்]

புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளன.

★ குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ள இருப்பதால் இன்றே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:-

**UNIKCO COMPUTER CENTRE**
**37, CLOCK TOWER ROAD,**
**JAFFNA**

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் புறமாக உள்ள மேல்மாடியில்) (சி/6354)

---

ஏப்ரல் 10 முதல்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# A|L-95

இரசாயனவியல்
**திரு. மகாதேவா**
பௌதீகவியல்
**திரு. வர்ணம்**
தாவரவியல்
**திரு. ஐங்கரநேசன்**
விலங்கியல்
**திரு. கெங்காதரன்**
தூய/பிரயோககணிதம்
**திரு. கிருஸ்ணா**

(சி-6339)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

சி-(6337)

---

# விஃனா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## 95 கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம் 10-4-93, 10-00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் ) இந்துசமயம் ) | — திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராஜா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறிதரன் |

- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முதல் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(சி-6335)

---

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்)
411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## O/L DAY CLASS

ஆரம்பம்:
**10-04-93 சனி மு. ப. 9மணி**

| | |
|---|---|
| கணிதம்: | திரு. B· P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | ( திரு. இரா. செல்வவடிவேல் ( திரு. J. J. கொலின்ஸ் |
| ச. கல்வி: | திரு. K. S. முத்துலிங்கம் |
| தமிழ்-சமயம்: | திரு. வேல்நம்பி |
| ஆங்கிலம்: | திரு, C, சத்தியமூர்த்தி |
| வர்த்தகம்: | திரு. விக்கி |

(சி/6360)

வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்

---

ஆரம்பமாகின்றன.

குறிப்பு: மாணவர் தொகை 200 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-6355)

---

## கணக்காளர் பதவி வெற்றிடம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருப்பவர்கள் 21-04-93 க்கு முன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பொருத்தமான ஊதியம் வழங்கப்படும்.

தகுதிகள் :

1. கணக்கியல் டிப்புளோமா
2. வர்த்தகமாணிப் பட்டப்படிப்பு
   (மேற்படி கல்வித் தகுதிகளுடன் குறைந்தது 2 வருட அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.)
3, ஒய்வு பெற்ற அரச கணக்காளர்
4. ஓய்வு பெற்ற அரச கணக்காய்வாளர்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

செயலாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

(சி/6351)

---

ஏப்ரல் 10 முதல்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# A|L-95

இரசாயனவியல்
**திரு. மகாதேவா**
பௌதீகவியல்
**திரு. வர்ணம்**
தாவரவியல்
**திரு. ஐங்கரநேசன்**
விலங்கியல்
**திரு. கெங்காதரன்**
தூய/பிரயோககணிதம்
**திரு. கிருஸ்ணா**

(சி-6338)

---

நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணி முறிந்துவிட்ட நிலையில் இத்தேர்தல் இரு கட்சிகளுக்கும் ஒரு பலப்பரீட்சையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதைத் தவிர தி. மு. க, பாட்டாளி மக்கள்கட்சி என்பனவும் தமது பலத்தை பரீட்சிக்கும் ஒரு களமாக இது இருக்கும்.

இதேவேளை இத்தேர்தலில் பாரதீய ஜனதாவும் போட்டியிடலாம் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

மாணவ

கிழமைவரைசகலபல நோக்குக் கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் மாத மாணவர் மதியமுத்திரைக்கு கால் கிலோ பனை வெல்லமும், மிகுதிக்கு சீனியும் வழங்கப்படும்.

நவம்பர், டிசம்பர் மாத முத்திரைக்கு ஒரு ஹைலண்ட் மா பைக்கெட்டும் மிகுதிக்கு பயறு, பட்டாணிப் பருப்பும் வழங்கப்படவுள்ளன. (24)

---

புலிகளின்

உள்ள இப் பாலத்தில் தாக்குதல் நடத்தப்பட்டமையே இராணுவ வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளமைக்குக் காரணமாகும். அத்தோடு கடலுக்கு ஊடாகச் செல்லும் வீதி ஒன்றில் தாக்குதலை நடத்திவிட்டு புலிகள்எவ்வாறு தப்பிச் சென்றார்கள் என்பது இராணுவ தரப்பில் பெரும் கேள்வியை எழுப்பியுள்ளதாகவும் அறியவருகின்றது.

இதேவேளை இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவினுள்ளும் விடுதலைப் புலிகள் அண்மையில் சில தாக்குதல்கள் மேற்கொண்டமை தெரிந்ததே.

---

உலக

விபத்தினாலும், காயங்களினாலும் தற்கொலை முயற்சிகளினாலும் இறப்போர் தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. பல நாடுகளில் நஞ்சூட்டல், வாகன விபத்துக்கள், நெருப்பினால் ஏற்படும் காயங்கள் போன்றவை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த வழிகளில் மரணிப்பவர் தொகை அதிகரிப்பதும், மற்றும் இதனால் பாதிப்பு அடைந்து அங்கவீனர்களாக பலர் வாழ்நாள் முழுவதும் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஆகையால், உலக சுகாதார நிறுவனம் சகல நாடுகளுக்கும், இப்படியான பாதிப்புகளைக் குறைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்குமாறு வேண்டியுள்ளது.